**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 74/2018**

PW1 – கருணாகரன் த/பெ கஞ்சமலை
நாள்–05.12.2023

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

நாராயண சாமி என்பவர் எனது தகப்பானருக்கு தாத்தா என்றால் சரிதான். நாராயணசாமிக்கு பிறகு இதுநாள் வரையில் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்பது தான் எனது தரப்பு வழக்கு என்றால் சரியல்ல. நாராயணசாமிக்கு பிறகு இதுநாள் வரையில் எனது குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் அசல் வழக்கு எண் 116/2014 , மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். ஆனால் அசல் வழக்கு எண் 116/2014-ல் உள்ள சொத்தும், இவ்வழக்கு சொத்தும் வெவ்வேறானது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அசல் வழக்கு எண் 116/2014-ன் பிராது நகல் என்றால் சரிதான். **அது பி.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அசல் வழக்கு எண் 116/2014 தற்சமயம் சீர்காழி, சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு புதிய எண்ணாக அசல் வழக்கு எண் 182/2023 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 116/2014-ல் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 116/2014-ல் முடிவு ஏற்பட்டதால் தான் எங்கள் குடும்ப உறுப்பனர்களுக்கு யார் யாருக்கு எவ்வளவு சொத்துக்கள் பாத்தியப்பட்டது என தெரியவரும் என்றால் சரிதான். ஆனால், இவ்வழக்கு சொத்து விவரத்திற்கு சம்மந்தம் இல்லை. 1-ம் பிரதிவாதியின் தாயார் பெயர் சரஸ்வதி ஆகும். 1-ம் பிரதிவாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட புல எண் 34/14 புஞ்சை 89 சென்ட் மகேஷ் பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மகேஷ் என்ன உறவு என்றால் எனது பங்காளி. மகேஷ் பெயரில் உள்ள சொத்துக்களை எனக்கு பாத்தியப்பட்டது என நான் உரிமை கோரவில்லை. தாவா சொத்தில் நான் சவுக்கு சாகுபடி செய்து வருவதற்கான வருவாய் துறை ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சவுக்கு எத்தனை ஆண்டு பயிர் என்றால் 4 ஆண்டு பயிர் ஆகும். வருடத்திற்கு எத்தனை முறை நீர்

இறைக்கப்படும் என்றால் எத்தனை முறை வேண்டுமானாலும் வைக்கலாம். ஆனால் முறையாக நீர் இறைத்தால்தான் நன்றாக சாகுபடி கிடைக்கும் என்றால் சரிதான். கோடைகாலத்தில் தாவா சொத்தில் உள்ள சவுக்குக்கு எங்கிருந்து நீர் இறைக்கப்படுகிறது என்றால் என்னுடைய மோட்டாரிலிருந்து காசிநாத படையாச்சி பாகத்தை தாண்டி நீர் இறைக்கப்படுகிறது. என்னுடைய பெயரில் இருப்பதாக கூறும் மோட்டார் எனது தம்பி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இலவச மின் மோட்டாரிலிருந்துதான் நீர் இறைத்து வருகிறேன் என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதியின் சுவாதீனத்தை நான் தான் இடையூறு செய்வதாக காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தான் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகவே தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை